மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 13 /2025**

வா.சா. 22

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 27ம் நாள், வாதி தரப்பு (வ.சா.2) சாட்சியின் வாக்கு மூலம் 1969ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.மூ.ராமநாதன்,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | முருகன் | Caste | |
| Father / Husband's Name | குருசாமி | Calling | |
| Village | | Religion | |

தேதி: 27.04.2026

<u>**முதல் விசாரணை**</u>

நான் கீழ கோபாலபுரம் ஊராட்சியில் செயலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க ஆவணங்களுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். தீர்வை சம்பந்தமான எங்களுடைய அலுவலகத்தில் இருந்து ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க கேட்டு எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் ஆவணங்களோடு நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். கதவு எண் 1/123 என்ற எண் கொண்ட கடையானது கணபதி என்பவரின் மகன் முருகன் என்பவரின் பெயரில் எங்களுடைய அலுவலகத்தில் தீர்வை ஏற்பட்டுள்ளது. மேற்படி கதவு எண்ணுக்கு எங்களுடைய அலுவலகத்தில் கணபதி மகன் முருகன் என்பவரின் பெயரில் கடந்த 1993 வருடத்திலிருந்து தற்பொழுது வரை அதே பெயரில் தான் அலுவலக பதிவுகள் காணப்படுகிறது. **அந்த அலுவலக பதிவுகள் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கதவு எண் அமைந்துள்ள கட்டிடமானது என்ன வகையான கட்டிடம் என்று நான்

நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உள்ள ஆவணங்களில் துலங்குமா என்றால் தற்பொழுது மேற்படி கதவு எண்ணில் அமைந்துள்ள கட்டிடம் ஆனது காரை கட்டிடம் ஆகும். பொதுவாக எங்களுடைய அலுவலகத்தில் தீர்வை ரசீது கேட்டு விண்ணப்பம் செய்தால் கட்டிடம் அமைந்துள்ள இடத்துக்கு சென்று பார்வை இடுவது வழக்கம் என்று சொன்னால் சரிதான். அதுபோல வீட்டு கதவு எண் வழங்குவதற்கு முன்பு பஞ்சாயத்து அலுவலகத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பு தான் வீட்டு கதவு எண் வழங்குவது வழக்கம் என்று சொன்னால் சரிதான். கதவு எண் 1/123 என்று வழங்கப்பட்டதற்கு தற்பொழுது வரை எங்களுடைய அலுவலகத்தில் எந்த தடங்கல் மனுவும் பெறப்படவில்லை என்று சொன்னால் நான் மூன்று வருடங்களாக பணிபுரிந்து வந்த இந்த காலகட்டத்தில் எந்த தடங்கல் மனுவும் பெறப்படவில்லை.

எங்களுடைய அலுவலகத்தில் தொலைந்து போன மற்றும் அழிக்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக பதிவேடுகள் பராமரிக்கப்படுவது வழக்கம் என்று சொன்னால் சரிதான். அதுபோல எங்களுடைய அலுவலகத்தில் ஒரு அலுவலர் மற்றொரு அலுவலரிடம் கோப்புகளை ஒப்படைக்கும் பொழுது அவர் பணிபுரிந்த கால கட்டத்தில் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்ட ஆவணங்கள் குறித்த பதிவேடுகளை பராமரித்து ஒப்படைப்பது வழக்கம் என்று சொன்னால் சரிதான்.

**1– 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எத்தனை வருடங்களாக நான் கீழ கோபாலபுரம் பஞ்சாயத்து அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் மூன்று வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். நான் அலுவலகத்தில் பணியில் சேரும்பொழுது அலுவலக கோப்புகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டது. பழைய தீர்வை ரசீதுகளின் அடிப்படையில் தான் கணினியில் தரவுகள் ஏற்றப்பட்டது என்று சொன்னால் சரிதான். தீர்வை ரசீது ஏற்படுத்துவதற்கு சொத்து சம்பந்தமான உரிமை ஆவணங்கள் மற்றும் அனுமதி வரைபடம் சமர்ப்பித்தால் மட்டும்தான் எங்களுடைய அலுவலகத்தில் இருந்து தீர்வை ஏற்படுத்தப்படும் என்று சொன்னால் சரிதான். கட்டிடம் கட்டி முடித்த பின்பு கட்டிடத்தை பார்வையிட்ட பின்னர் தான் தீர்வை இரசீது வழங்கப்படும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் தீர்வை ஏற்படுத்துவதற்கு

என்னென்ன ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

தீர்வை ஏற்படுத்துவதற்காக எங்களுடைய அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றும் மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் பட்சத்தில் உண்மை நிலவரம் தெரியவரும் என்றும் சொன்னால் சரியல்ல. கீழ கோபாலபுரம் பஞ்சாயத்து பெரிய பஞ்சாயத்து என்று சொன்னால் சரியல்ல. எழுத்துப்பூர்வமாக தீர்வை ரசீது ஏற்படுத்திக் கொண்ட காலத்தில் அதனுடைய கார்பன் நகல் அலுவலகத்தில் பராமரிக்கப்படுவது வழக்கம். வா.சா.ஆ.3 எங்களுடைய அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கார்பன் பதிவுகள் காணப்படுகிறதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் எங்களுடைய அலுவலகத்தில் தலைவர் இருந்தார் என்று சொன்னால் சரிதான்.

வா.சா.ஆ.3 ஆவணத்தில் பின்பக்கம் கார்பன் பதிவுகள் எதுவும் காணப்படாத காரணத்தினால் மேற்படி ஆவணமானது வாதி கேட்டுக் கொண்டதற்காக பஞ்சாயத்து தலைவர் தன்னிச்சையாக ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமானது 2022–2023 காலகட்டத்திற்கு ஏற்படுத்தப்பட்ட ரசீது ஆவணம் என்று சொன்னால் சரிதான். எங்களுடைய பஞ்சாயத்துக்கு உட்பட்ட எல்லையில் எத்தனை குக் கிராமங்கள் உள்ளது என்றால் எதுவும் இல்லை. புதுார் என்று எந்த கோப்புகளிலும் காணப்படவில்லை. கீழ கோபாலபுரம் ஊராட்சி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. பொறியாளரை வைத்து அளவீடு செய்தால் மட்டும் தான் தீர்வை ஏற்படுத்த முடியும் என்று சொன்னால் சரிதான்.தீர்வை இரசீது கேட்கப்பட்ட இடத்துக்கு சென்று அளவீடு செய்வது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

தீர்வைத் தொகையானது குடியிருப்பு கட்டிடங்களுக்கும் வருமான நோக்கிற்காண கட்டிடங்களுக்கும் வெவ்வேறு தொகை வசூலிக்கப்படும் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் ஆனது குடியிருப்புக்காக

ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். தீர்வை இரசீது காண அடிக்கட்டை எங்களுடைய அலுவலகத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஒவ்வொரு வருடமும் Demand ரசீது வழுங்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரிதான். குடியிருப்பாக பயன்படுத்தி வருகின்ற கட்டிடத்தை வணிக நோக்கத்திற்கான கட்டிடமாக மாற்றி தீர்வை செலுத்த வேண்டுமானால் அதற்கு முன்பாக முறையாக விண்ணப்பம் செய்து அதன் அடிப்படையில் தான் மாற்றம் செய்ய இயலும் என்று சொன்னால் சரிதான்.வாதிகள் பெயரில் எங்களுடைய அலுவலகத்தில் தீர்வை ஏற்படவில்லை என்றும் அதனால் தான் நான் அழைப்பாணையில் கண்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு